2015 செப்டம்பர் 1]

190—

விளையாட்டு அரங்கம்

***41107—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாளில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக புதிய விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாளில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் புதிய விளையாட்டு அரங்கம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் 'மாண்புமிகு' என்று அழைப்பதைப்போல, பெருமைக்குரியவர்களை 'திரு' என்றும் 'திருமதி' என்றும் சிறப்பாகச் சொல்லி அழைப்பது நம் தமிழர் பண்பாடு. அதன் அடிப்படையில் நமக்கு அமைக்கப்பட்ட 234 தொகுதிகளில், தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களுக்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையில், திரு.வி.க. நகர் தொகுதி, ஆன்மிகப் பெருமக்கள் விரும்புகிற, வணங்குகிற திருவண்ணாமலை, திருத்துறைப்பூண்டி, திருச்சுழி, திருச்செந்தூர், இன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் நின்று வென்ற திருவரங்கம், திருக்கோவிலூர், திருவையாறு, திருவொற்றியூர், திருமங்கலம், திருத்தணி, திருவள்ளூர், திருவல்லிக்கேணி–சேப்பாக்கம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டில் உள்ள ஊர் பெயர்களையெல்லாம் சொல்லாதீர்கள்; கேள்வியைக் கேளுங்கள்.

முனைவர் கோவி. செழியன்: என் தொகுதியின் நிலவரத்தைச் சொல்லித்தான் கேட்க வருகிறேன்; பெருமைக்குரியதாக உள்ளதைத்தான் சொல்ல வருகிறேன். திருப்பெரும்புதூர், திருப்போரூர், திருப்பத்தூர், திருச்செங்கோடு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, திருச்சிராப்பள்ளி மேற்கு, திருச்சிராப்பள்ளி கிழக்கு, திருமயம், திருப்பத்தூர்–சிவகங்கை, திருப்பரங்குன்றம், திருவில்லிப்புத்தூர், திருவாடனை, திருவைகுண்டம், திருநெல்வேலி, நான் சார்ந்த திருவிடைமருதூர்; 1952–ல் குளித்தலையில் நின்று இன்றுவரை வெற்றி பெற்ற எங்கள் தலைவர் கலைஞர் அவர்களின் திருவாரூர் வரை இவ்வளவு தொகுதிகள் இருந்தாலும்கூட, என்னுடைய தொகுதி, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, தொழில் வளர்ச்சி இல்லாத ஒரு தொகுதியாக இருக்கிறது. நகராட்சி இல்லாத தொகுதி. எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த அல்லது எங்கள் மாவட்டத்தை ஒட்டி உள்ள மாண்புமிகு அமைச்சர்களுக்குத் தெரியும். பெரிய தொழிற்சாலை இல்லாத தொகுதி; பெரிய அளவில் தங்கும் விடுதிகள்கூட இல்லாத தொகுதி. அந்த அளவிற்கு குக்கிராமங்கள் நிறைந்த தொகுதி. இந்தத் தொகுதியில் 20–க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள், 25–க்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன; இளைஞர்கள், விளையாட்டு வீரர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இதில் உண்மை என்னவென்றால், தனியார் பள்ளிகளில் விளையாட்டு மைதானம் இல்லாத பள்ளிகளும் என் தொகுதியில் நிறைய உண்டு. நான் கேட்கிற கேள்வியே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முனைவர் கோவி. செழியன், நீங்கள் இன்னொரு கேள்வி கேட்க வேண்டும். உங்கள் முதல் கேள்வியைச் சுருக்கமாக முடியுங்கள். இல்லையென்றால், ஒரே கேள்வியோடு முடிக்க வேண்டியதுதான்.

முனைவர் கோவி. செழியன்: விளையாட்டு வீரர்களையும், இளைஞர்களையும், மாணவர்களையும் ஊக்கப்படுத்த, "இல்லை" என்று சொல்லாமல், எங்கள் தொகுதிக்கு ஒரு விளையாட்டு அரங்கத்தை, உள் விளையாட்டு அரங்கத்தை திருப்பனந்தாளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2015 செப்டம்பர் 1]

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களே தம் மக்கள், தமிழக நலனே தன் நலன் என்று கண்ணை இமை காப்பதுபோல் மக்களைத் தேடிச் சென்று (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இங்கே அன்போடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் அது ஆன்மிக நகரமாகவும், நகராட்சி இல்லாத தொகுதியாகவும் இருக்கிறது என்று சொன்னார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியில், ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைநகரங்களிலும் சிறந்த விளையாட்டு அரங்கங்கள், 400 மீட்டர் ஓடுதளப் பாதை, கால்பந்தாட்ட மைதானங்கள், உள் விளையாட்டு அரங்கங்கள், நீச்சல்குளங்கள், உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் விளையாட்டு விடுதிகள், தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தின்மூலம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாவட்டத் தலைநகரங்களில் மேற்படி விளையாட்டு வசதிகளை ஏற்படுத்திய பின்னர், மாவட்டத்திலுள்ள முக்கிய நகரங்களில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கே கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் திருவிடைமருதூர் தொகுதியில் திருவீசநல்லூர், விசலூர் மற்றும் நெய்மேலூர் ஆகிய மூன்று ஊராட்சிகளில் தலா ரூ.75,000 வீதம் வழங்கப்பட்டு, PYKKA திட்டத்தின்மூலம் விளையாட்டு மைதானம் மற்றும் ஓடுபாதை அமைக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல; திருவிடைமருதூரில் உள்ள 48 கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தின்மூலம் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ரூ.20,000 வழங்கப்பட்டு, கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டு, சிறப்பான முறையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய 'திரு' என்ற வார்த்தைக்கு மரியாதை கொடுத்து

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை அன்போடு சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், சுருக்கமாகக் கேளுங்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவீசநல்லூர், விசலூர் மற்றும் மூன்றாவதாகச் சொன்ன நெய்மேலூர் ஊராட்சி எனது தொகுதியில் எந்த ஊராட்சி என்று எனக்குப் புரியவில்லை. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். அத்துடன், எனது தொகுதியில் உள்ள தேப்பெருமாநல்லூர் கிராம ஊராட்சியில், 50–க்கும் மேற்பட்ட இளைஞர்கள் இறகுப் பந்து விளையாட்டு அரங்கம் வேண்டும் என்று கேட்ட காரணத்தினால், இந்த நிதியாண்டில் எனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் நிதியினை உள் விளையாட்டு அரங்கம் அமைக்க நான் தந்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் மீண்டும் கேட்டுக்கொள்ள விரும்புவது, கும்பகோணம், மயிலாடுதுறை தொகுதிகளில் பெரிய பெரிய விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன. இதற்கு இடைப்பட்ட தொகுதிதான் எனது தொகுதி. ஊராட்சிகளுக்கு வழங்கக்கூடிய ரூ.20,000 அல்லது ரூ.20,00,000/– என்பது பெரிய பெரிய விளையாட்டுகளுக்குப் பயிற்சி எடுக்க, ஓட்டப்பந்தயங்களில் கலந்துகொள்வதற்குப் போதுமானதாக இல்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலேயே ஓர் உள் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு நிதி தருகின்றபோது, விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 'இல்லை' என்று சொல்லாமல், திருப்பனந்தாளில் நிச்சயமாக அமைத்துத் தர வேண்டும்; அமைத்துத் தருவீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இன்றையதினம் உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்புகளை சென்னையில் உருவாக்கியிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைநகரங்களிலும் அதுபோன்ற*

2015 செப்டம்பர் 1]

கட்டமைப்பினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி போன்ற இடங்களில் அவை சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை இங்கே நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதுபோல், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அந்தத் தொகுதியிலிருந்து இடத்தினை ஏற்பாடு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒப்படைக்கும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தகுந்த இடம் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு வழங்கப்படுகின்றபோது, இந்தத் துறை அதை ஆய்வு செய்யும். அங்கே எந்தத் துறையில் விளையாட்டு வீரர்கள், எவ்வளவு இருக்கிறார்கள்; என்ன விளையாட்டிற்கு மைதானம் அமைக்க வேண்டும் என்பதையெல்லாம் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 191, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

191—

அடிப்படை வசதிகள் மற்றும் கட்டடங்கள்

***16811—திரு. சு. ரவி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்திலுள்ள அரசு ஆதி திராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கழிவறை, கூடுதல் ஆய்வகக் கட்டடங்கள் கட்டவும், ஆதி திராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் செய்யவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?